மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம் செய்யூரிலிருந்து பனையூர் செல்லும் சாலையை தேவையான குறுக்கு வடிகால் அமைப்புகளுடன் மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணியை விரைவில் முடிக்கும்படி, சென்னை நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறை மேற்பார்வைப் பொறியாளருக்கு நெடுஞ்சாலை கிராமப் பணிகள் துறைத் தலைமைப் பொறியாளர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, சாதாரண மழை காலத்தில்கூட பாதை அடைபட்டுப் போகிறது. ஆகவே, உடனடியாக இதைச் செயல் படுத்த அமைச்சர் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : என்னுடைய பதிலிலேயே அதை விரைவில் முடிக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

*** 213 வினா—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) மேலூரிலிருந்து திருச்சி செல்லும் சாலையையும், கொட்டாம் பட்டியிலிருந்து திண்டுக்கல் செல்லும் சாலையையும் 100 அடி அகலமாக்குவதற்குரிய செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இத்தகைய செயற்குறிப்பு எதும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

*214. *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the expenditure incurred during the last three years by the Government in maintaining the city roads taken over from the Madras Coporation ;

(*b*) the details of the roads so taken for maintenance ; and

(*c*) whether the Government propose to hand over the maintenance work back to the Madras Corporation ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ), and (இ) : மன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையைப் பார்க்குமாறு மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

(உ) இல்லை, அத்தகைய செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. விநாயகம் : சார், கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான ரோடுகளை பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் எடுக்க வேண்டும் என்று ஒரு விதியின் அடிப்படையில், சென்னைக்கு வருகிற ரோடுகள் அனைத்தையும் எடுத்துக் கொள்ள செயற்குறிப்பு ஏதாவது உண்டா ? குறிப்பாக கோடம்பாக்கம் ஆற்காடு ரோடில் அதிகமான வண்டிகள் சென்று, அதிக போக்குவரத்து இருப்பதால், அதை விசாலப்படுத்துவதற்கும், வேறு வழிகள் செய்வதற்கும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதே அரசாங்கம் எடுத்திருக்கும் சாலைகளை மாநகராட்சி திரும்பக் கேட்கிறார்கள். பொதுவாக அப்படிப்பட்ட செய்ற்குறிப்பு எதுவும் இல்லை.

அ 757–758-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, மெரினு பீச் ரோடு அரசாங்கப் பராமரிப்பில் உள்ளதா அல்லது கார்ப்பரேஷன் பராமரிப்பில் இருக்கிறதா ? குறிப்பாக பப்ளிக் ஒர்க்ஸ் ஆபீஸ்கள் இருக்கும் இடத்திற்கு எதிரில் மெரினு சாலை மிக மோசமாக இருக்கிறது. அதைச் சரி செய்ய அரசாங்கம் உத்தரவு போடுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதே, வடக்கே கஸ்டம்ஸ் ஹவுசிலிருந்து பீச்சு சாலைகளெல்லாம் அரசாங்கப் பராமரிப்பில் தான் இருக்கின்றன. உறுப்பினர் சொன்ன குறைபாடுகளும் கவனிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சென்னை நகரம் நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிறது. ஆகவே, நெடுஞ்சாலை பராமரிப்புக்கு அதிகமான தொகைகள் ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் இங்கே பார்க்கும்போது, 1964-65-ல் ரூ. 4,08,847 என்று இருந்தது, 1966-67-ல் ரூ. 3,61,479 என்று குறைந்துவிட்டிருக்கிறது. அப்படிக் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழுது குறைவாக இருந்திருக்கும். ஆகவே, செலவும் குறைவாக இருக்கும்.

உடன்குடி பகுதியில் தானிய விநியோகம்

*215 வினு—**திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சாத்தான்குளம் உடன்குடி பகுதிகளிலுள்ள (minor) பஞ்சாயத்துக் கிராமங்களில் ரேஷன் கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) தூத்துக்குடி சப் தாலுக்காக்களில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் ரேஷன் வழங்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) அண்டு (இ) சாத்தான்குளம் பகுதியில் அரிசி தேவைப்படுகிற 18 கிராமங்களில் நியாயவிலை கடைகள் மூலமாக அரிசி வழங்கப்படுகிறது. தூத்துக்குடி துணைவட்டத்தில் 20 கிராமங்களுக்கு அரிசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் ஸார், சாத்தான்குளம் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அறுவடை காலம் என்று பல கிராமங்களில் ரேஷன் நிறுத்தப்பட்டு இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? அந்த கிராமங்களில் திரும்பவும் அரிசிபோட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அறுவடைக் காலத்தை முன்னிட்டு, சாத்தான்குளம், உடன்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில், சில பஞ்சாயத்துக்களில் உணவுப் பங்கீடு நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அங்கேயெல்லாம் இப்பொழுது திரும்பவும் குடும்பக் கார்டு முறையில் பங்கீடு செய்யப்படுகிறது. சாத்தான்குளத்தில், பெரியதலை, புடுக்கப்பட்டு, அரசூர், எழுவரைமுக்கி, அலகப்பாபுறம் போன்ற 18 பஞ்சாயத்துகளிலும், உடங்குடி பஞ்சாயத்து யூனியனில், அறியக்குறிச்சி, செட்டியப்பத்து, நங்கைமொழி, வெங்கடராமானுஜபுரம் போன்ற 12 பஞ்சாயத்துக்களும் ஆகும். அறுவடை காலம் என்பதற்காக முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும், இப்பொழுது அது ரெஸ்டோர் செய்யப்பட்டுவிட்டது.

திரு மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, தூத்துக்குடி சப்தாலுகாவில் நஞ்சை நிலம் இருக்கும் கிராமங்களுக்கு அரிசி கொடுப்பதில்லை என்பது உண்மையா ?